# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2011/2012 (2015 July)

## Geos 4104 மனிதவள அபிவிருத்தி (Human Resource Development)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

ஓவ்வொரு பகுதியிலிருந்தும் இவ்விரு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி 1

01. 1. மனிதவளழ் மனிதவள முகாமைத்துவம் ஆகிய பதங்களை வரையறை செய்வதுடன் மனிதவள முகாமைத்துவம் உள்ளடக்கும் அம்சங்களையும் குறிப்பிடுக.
(06 புள்ளிகள்)

11. மனிதவள முகாமைத்துவ அடிப்படைத் தொழிற்பாடுகளின் நன்மை சார்ந்த விளைவுகளை பின்வரும் தலைப்புக்களின் கீழ் விளக்குக.

அ. செயலாக்க மதிப்பீடு

ஆ. பணிபுரியத்தக்க சூழ் நிலையைப் பராமரித்தல

இ. தொழில்சார் தகராறுகளை தீர்த்து வைத்தல்

(09 புள்ளிகள்)

111. மூல உபாயம் சார்ந்த மனிதவளத் திட்டமிடல் செய்முறையின் நோக்கங்கள் யாவை?
(04 புள்ளிகள்)

1v. மேற்குறிப்பிட்ட செய்முறையில் தற்கால மனித்வள இயலுமையினை மதிப்பிடல் மனிதவளத் தேவைகளை எதிர்வு கூறல் ஆகிய இரு படி முறைகளின் முக்கியத்துவத்தினைப் பரிசீலிக்குக.
(06 புள்ளிகள்)

02. 1. மனிதவள அபிவிருத்திக்குத் தேவையான அடிப்படை அம்சங்களைக் குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)

11. மனிதவள அபிவிருத்தித் திட்டமிடலை மேற்கொள்வதில் தென்னாசிய நாடுகள் எதிர் நோக்கும் தடைகள் யாவை?

(10 புள்ளிகள்)

111. வளர்முக நாடுகளில் மனிதவளம் இன்னும் திருந்திய வளமொன்றாக உருப்பெறாமைக்குப் பொறுப்பான காரணிகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

03. 1. தொழிற்படை பற்றித் திட்டமிடும் திட்டமிடலாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கி விடயங்களைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

11. உலக ரீதியாக இடம்பெற்று வரும் தொழில் நுட்ப மாற்றமானது வளர்முக நாடுகளின் தொழிற் படையில் ஏற்படுத்தி வரும் மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

## பகுதி 11

04. இலங்கையில் 1945 ஆம் ஆண்டு முதல் இன்று வரை மனிதவள அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட கல்வி சார்ந்த நடவடிக்கைகளை நுணுகி ஆராய்ந்து நாடொன்றின் மனிதவள அபிவிருத்தி முழுமை பெறாமைக்குத் தடையாயுள்ள கல்விசார் பிரச்சினைகளையும் நுணுகி ஆராய்க.

(25 புள்ளிகள்)

05. 'உலகின் இன்றைய குடித்தொகை வளர்ச்சிப் போக்கு அபிவிருத்திக் குறிகாட்டிகள் பலவற்றில் மிகவும் செம்மையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை வேண்டி நிற்கின்றது'. இக் கூற்றினை வளர்முக நாடுகளிலிருந்து உதாரணங்கள் தந்து விளக்குக.

(25 புள்ளிகள்)

06. சுதந்திரத்தினை அடிப்படையாகக் கொண்ட மனித வள அபிவிருத்தியில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்து வருகின்றது' எனும் கருத்துடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கையில் கிடைக்கப்பெறும் சுகாதார சேவைகளையுமு் சுகாதார முன்னேற்ற முயற்சிகளையும் அடிப்படையாகக் கொண்டு இக் கூற்றினை ஆராய்க.

(25 புள்ளிகள்)